# திருவயிந்திரபுரம்

திருவயிந்திரபுரம்! ஆயிரமாறுகளும் சுனைகள் பலாயிரமும், ஆயிரக் கணக்கான மலைகளையும் கொண்டது நம் பாரத நாடு. இவற்றுள் இரண்டு மலைகளுக்குத் தனிப் பெருமையுண்டு. பகவானே ஒரு மலையாக ஆகியுள்ளான். அவனை விட்டுப் பிரியாமல் அடிமை செய்யும் ஆதிசேஷன் ஒரு மலையாகத் தோன்றியுள்ளான். பகவானே கோவர்த்தன மலையாக இருக்கிறான். ஆயர்கள் செய்த பூஜையைத் தானே கோவர்த்தன மலையாக இருந்து ஏற்றிருக்கிறான். திருவேங்கடமுடையான் (ஸ்ரீநிவாஸன்) எழுந்தருளியுள்ள திருப்பதி மலை 'சேஷாத்ரி' எனப்படுகிறது. ஆதிசேஷனே திருமலையாக இருக்கிறார் என்பது பெரியோர்களின் துணிவு. ஆதிசேஷன் பெயரால் ஏற்பட்ட நகரமே திருவயிந்திரபுரம். அஹிந்தரபுரம் என்ற சொல்லே 'அயிந்திரபுரம்' என்று மாறி 'அயிந்தை' என்றும் மருவியது.

## ஸ்தலசயனத்துறைவார்

மலையைக் கொண்டு வந்த மாருதி:— இவ்வூரிலுள்ள மலைக்கு 'ஔஷதாத்ரி' என்று பெயர். ஸஞ்சீவி மலை என்றும் பெயருண்டு. இராமனுக்கும் இராவணனுக்கும் நடந்த போரில் ஒரு சமயம் அரக்கர்களால் வானரங்களின் படை வீழ்த்தப்பட்டது. இந்நிலையைக் கண்ட வாயுபுத்திரனான அனுமன் வான் வழியே விரைந்து சென்று ஸஞ்சீவி மலையைப் பெயர்த்து எடுத்து வந்தார் மலைக் காற்று பட்டவுடன் குரக்கினங்கள் உயிர் பெற்று எழுந்தன. இதுபோல் முன்

ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பெரும் போர் நடைபெற்றது. இப்போரில் தேவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டார்கள். அனுமான் ஸஞ்ஜீவி மலையின் ஒரு கொடு முடியைக் கொண்டு வந்து தேவர்களைக் காப்பாற்றினார் என்று கூறப்படுகிறது. 'இம்மலை தன்னுடையது' என்று இன்றும் உரிமை கொண்டாடுவதுபோல் இம்மலையடிவாரத்தில் திருவடி (ஹநுமான்) எழுந்தருளி இருக்கிறார். நம் வேதாந்தாசாரியருக்கு (வேதாந்ததேசிகருக்கு) கருடன் ஸேவை ஸாதித்து ஹயக்ரீவ மந்திரத்தை உபதேசித்து ஹயக்ரீவ விக்ரஹத்தையும் கொடுத்தது இம்மலையில்தான் என்றும் கூறப்படுகிறது.

**பரிமுகனார் செய்த பேருதவி :** பகவான் பல அவதாரங்களை மேற்கொண்டுள்ளான். அவற்றுள் ஒன்று ஹயக்ரீவ அவதாரம். (மனித உடலும் குதிரை முகமும் கொண்டு கழுத்துக்கு மேலே ஒருபடியும் கழுத்துக்குக் கீழே ஒரு விதமாகவும் எடுத்த அவதாரம்). அரிமுகனும் பரிமுகனும் ஒருவனே.

ஒரு காலத்தில் மதுகைடபர்கள் (அசுரர்கள்) வரவலிமையால் செருக்குண்டு பிரம்மாவை எதிர்த்தனர். வேதங்களை அபஹரித்துத் தம் மாயையினால் அவற்றையெல்லாம் சேர்த்து பெண் குதிரை வடிவமாக்கிப் பாதாளத்தில் ஓரிடத்தில் மறைத்து வைத்தனர். பிரம்மா ஸ்ரீமந்நாராயணனை அடைந்து உதவ வேண்டினார். எம்பெருமான் மதுகைடபர்களைத் தேடிப் பிடித்து அழித்தான், ஹயக்ரீவனாக ஆனார். பெண் குதிரையாக இருந்த மறையாய நால் வேதங்களையும் மீட்டுப் பிரம்மாவிற்கு அளித்தார், திருமகள் குதிரையின் முகத்தில் வசிப்பதாக நூல்கள் கூறுகின்றன. கலைமகளும் ஹயக்ரீவனை வணங்கி வழிபட்டே கல்விக் கடவுளானாள்.

**தாகத்தைத் தீர்த்த அனந்தன் :** பாற்கடலில் பள்ளி கொண்ட பரமன் ஆலஹரியிலுள்ள மலையில் வந்து தங்கிக் களைப் பாறிக் கொண்டிருந்தார். அவருக்குத் தாகம் ஏற்பட்டது.

அருகிலிருந்தவர்களிடம் தெரிவித்தார். நீர் நிலைகள் அங்கு இல்லாததால் தீர்த்தம் (தண்ணீர்) கொண்டுவருமாறு கருடனுக்கு ஆணையிட்டார். கருடன் சென்று வெகுநேரமாயிற்று; வந்து சேரவில்லை. திருவனந்தாழ்வானுக்குக் கட்டளை இட்டார். அவர் உடனே பூமியைத் தன் வாலால் ஓங்கியடித்தார். பூமி பிளந்தது. பூமிக்குள்ளிருந்து தண்ணீர் மேலே வந்தது. அதைக் கொண்டு கொடுத்துப் பகவானின் தாகத்தைத் தீர்த்தார். பகவானும் தண்ணீர் தோன்றிய நீர் நிலையைக் கண்டு 'சேஷதீர்த்தம்' என்று பெயரிட்டான்.

கருடன் மிகவும் அவசரமாக வந்து "தங்களின் தாகத்தைத் தணிக்க முனிவரின் அருளால் ஒரு நதியையே அழைத்து வந்திருக்கிறேன்; சிறிது தாமதமாகிவிட்டது" என்றார். பகவான் கருடனுக்கு ஆறுதல் கூறி அதற்குக் 'கருட நதி' என்று பெயரிட்டதாகப் புராணம் கூறுகிறது. நாளடைவில் கருட நதியே 'கெடிலம் நதி' என்று வழக்கில் வந்துவிட்டது.

இவ்வூரிலுள்ள ஸன்னிதியின் வாசலில் கடில நதியும், ஸன்னிதியின் பிராகாரத்தில் சேஷ தீர்த்தம் கிணறு வடிவிலும் இருக்கின்றன. இவ்விரண்டு தீர்த்தங்களையே தேவநாதன் விரும்பி ஏற்கிறான். இவ்விரண்டினைத் தவிர பிரம்ம தீர்த்தம், பூமி தீர்த்தம் ஆகிய இரண்டும் இவ்வூரில் சிறப்புடையனவாகும்.

**லக்ஷ்மீ கல்யாணம் !** ஒரு சமயம் பிருகு முனிவர் இவ்வூரிலுள்ள மலையில் தவம் செய்தார். பூமி தீர்த்தம் என்ற குளத்தையும் தோற்றுவித்தார். ஒரே ஒரு நாள் அக்குளத்தில் ஆயிரம் இதழ் கொண்ட பொற்றாமரையைக் கண்டார். அம்மலரில் அழகிய பெண் குழந்தை ஒன்று இருந்தது. நிதி கிடைத்ததாக எண்ணி முனிவர் அக்குழந்தையை எடுத்து வளர்த்தார். அவளுக்குப் பொற்றாமரையாள் என்று பெயரிட்டார் அவளும் வளர்ந்து பகவானையே நாயகனாக அடைய வேண்டும்' என்று தவம் புரிந்தாள். எம்பெருமானும் திருவுள்ளம் உவந்தான். முனிவரும் தன் மகளைப் பகவானுக்கு

கன்னிகா தானம் செய்து கொடுத்தார். எம்பெருமானும் பொற்றாமரையாள் கேள்வனானான். அவன் முனிவரைத் தன் அருகிலேயே இருக்கச் செய்தான். அதிலிருந்து தேவநாதனின் திவ்ய மஹிஷி ஹேமாப்ஜ நாயகி, செங்கமல நாயகி என்றும் அழைக்கப்படுகிறாள்.

அவ்வூரில் திருவனந்தாழ்வானின் அபராவதாரமாகிய நம் மணவாளமாமுனிகள் தம் பிறந்த நாளைத் தேவநாதனின் திருவடி வாரத்தில் நித்ய ஸ்ரீர் நித்யமங்களமாகக் கொண்டாடி வருகிறார்.

**எங்கள் குலதெய்வமே!** பகவானை ஸேவிக்கப் போகிறோம். என்று உள்ளம் மகிழவேண்டும். கன்று தாய்ப் பசுவை நாடிச் செல்வதுபோல் பேரார்வத்துடன் அவனிடம் செல்ல வேண்டும். தேவர்களுக்குத் தலைவனான அவனே நமக்கும் தலைவன் என்று நினைக்க வேண்டும். அப்போதலர்ந்த மலர்களை அவனது திருவடிகளில் சேர்த்து அவனை வணங்க வேண்டும். பணிவே அவனருளை நமக்குப் பெற்றுத்தருகிறது. பணிவு உயர்நிலையை அடைவிக்கிறது. ஒரு அன்பர் இவ்வாறு தேவநாதனை வணங்குவதைத் தேவர்கள் மறைந்திருந்து காண்கிறார்கள். தேவநாதன் அவ்வடியார் சொற்படி நடந்து கொள்கிறான்; பலவரங்களை அருளுகிறான். அடியவர்க்கு மெய்யனாக இருக்கிறான். இதைக் கண்ட தேவர்கள், தேவநாதனுக்காகக் கொண்டு வந்த மலர்களால் இவ்வடியாரைப் பூசிக்கிறார்கள். தேவநாதனின் திருவருளைப் பெற்ற தேவரே எங்களுக்குத் தலைவர், எங்கள் குலதெய்வம் என்று கொண்டாடுகிறார்கள். தேவநாதனின் பெருமைகளை யாரால் கூறமுடியும்? என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

**அன்பணிந்த சிந்தையராய் ஆய்ந்தமலர் தூவி**
**முன்பணிந்து நீரெமக்கு மூர்த்தியரே—என்பர்**
**எமையிந்திர புரத்தார்க்கு இன்தொண்டரானார்**
**தமையிந்திர புரத்தார் தாம்**

★